பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 01 வியாழக்கிழமை 17.07.2025 கதிர் 250

## இது ரகசியம் அல்ல!

கடும் பரபரப்பாக உள்ளூராட்சி தேர்தல்கள் நடந்து முடிந்துவிட்டாலும், அந்தத் தேர்தலால் ஆளும்தரப்பின் வாக்குகள் சரிந்துவிட்டன என்று எதிர்க்கட்சிகள் எவ்வளவுதான் ☞ 2

### தேசிய மக்கள் சக்தியின் வெலிகம

## பிரதேச சபை உறுப்பினர் வீட்டை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு

தேசிய மக்கள் சக்தியின் வெலிகம பிரதேச சபையின் உறுப்பினர் சட்டத்தரணி தாரக நாணயக்காரவின் வீட்டை இலக்கு வைத்து நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூடு தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

பிரதேச சபையின் உறுப்பினருடைய வெலிகம தெலிஜ்ஜவில பகுதியில் அமைந்துள்ள வீட்டை ☞ 6

# எதிர்க் கட்சிகள் ஒன்றிணைந்துள்ளதால் அவற்றை ஒடுக்க ஆளும்தரப்பு முயற்சி

### ஐக்கிய மக்கள் சக்தி பொதுச் செயலர் தெரிவிப்பு

எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்துள்ளதால், எதிர்க்கட்சிகளை முடக்குவதற்கு ஆளும்தரப்பு தீவிர அவதானம் செலுத்தியுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பு கோட்டை நீதிவான் மன்றத்துக்கு நேற்று புதன்கிழமை வழக்கு விசாரணைக்காக சென்றதன் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

திருடர்களை பிடிப்பதற்கும், ஊழல் மோசடிகளை இல்லாதொழிப்பதற்கும் நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. ஊழல் எதிர்ப்புக்கு நாங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

ஊழல் என்று குறிப்பிட்டுக் கொண்டு எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களை அச்சுறுத்துவதாயின் அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காகவே நாங்கள் ஒன்றிணைந்துள்ளோம். நீதிமன்றம் சுயாதீமான முறையில் செயற்படும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

ஊழல்வாதிகளைப்பிடிப்பதாகஇந்த ☞ 2

# ஜுலை 24, 25 கிட்டுப் பூங்காவில் கறுப்பு ஜுலையின் நினைவேந்தல்

### பெருமெடுப்பில் நடத்த ஏற்பாடு





=கறுப்புஜுலை'பொது நினைவேந்தலும் - விடுதலைக்கானபோராட்டமும் யாழ்ப்பாணம் கிட்டுப் பூங்காவில் ஜுலை 24 மற்றும் 25 ஆகிய நாள்களில் முன்னெடுக்கப்படவுள்ளது.

'குரலற்றவர்களின் குரல்'அமைப்பினால் இந்த நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. அந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் நிகழ்வு குறித்து நேற்று யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

இதுவரைகாலமும்இலங்கையின்கொடூர ☞ 2

## கொலைச் சந்தேகநபர்கள் நால்வர் பொலிஸால் கைது

அண்மையில் கஹவத்தை பகுதியில் இளைஞர்கள் இருவர் கடத்தப்பட்டு அதில் 22 வயதுடைய இளைஞர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் நால்வர் மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். ☞ 6

## பிரகீத் எக்னலிகொட வழக்கில் ஷானி அபயசேகரவும் சாட்சி

ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட கடத்தப்பட்டு காணாமல் போனது தொடர்பான வழக்கில்,குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தின் தற்போதைய பணிப்பாளர் ஷானி அபேசேகர சாட்சியாக பெயரிடப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் நேற்று கொழும்பு உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு அறிவித்தார்.

நாமல் பலல்லே, மகேஷ் வீரமன் மற்றும் சுஜீவ நிசங்க ஆகிய மூவர் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு முன்பாக இன்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

இதன்போது, பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பாக ஆஜரான அரசுத் தலைவர் ☞ 6

# அமெரிக்காவின் வரி விதிப்பால் ஆடைத் தொழில் வீழ்ச்சியடையும்

### ஐ.தே.கட்சி முன்னாள் எம்.பி. எச்சரிக்கை

அமெரிக்காவினால் விதிக்கப்பட்டுள்ள 30 வீத தீர்வை வரி ஏற்கனவே எங்களுக்கு இருந்த வரியைவிட மூன்றுமடங்கு அதிகரிப்பாகும். அதனால் இராஜதந்திர ரீதியில் செயற்பட்டு இதனை மேலும் குறைத்துக்கொள்ள ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் எமது ஆடை உற்பத்தி தொழிற்சாலைகள் வீழ்ச்சியடையும் அபாயம் இருக்கிறது என ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் அலுவலகத்தில் நேற்றும் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமெரிக்க ஜனாபதியினால் ☞ 2

# ஆளும்தரப்பு விசாரணைகளை எதிர்கொள்வதற்கு சஜித் தயார்

### செவன வீடமைப்பு முறைகேடு தொடர்பில் அவரே அறிவிப்பு

நாட்டுக்கான அபிவிருத்திப் பணிகளை செய்ததும் ஒரு குற்றமாக கருதும் தரப்பினர் இந்த நாட்டில் உள்ளார்கள். ஆளும்தரப்பிலும் உள்ளார்கள். சட்டத்தின் பிரகாரமே வீடமைப்பு அபிவிருத்தி பணிகளைமேற்கொண்டேன். ஆளும்தரப்பு முன்னெடுக்கும் விசாரணைகளுக்கு தயார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நல்லாட்சிக் காலத்தில் செயற் படுத்தப்பட்ட செவன மாதிரி கிராம வீட்டுத்திட்டத்தில் முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாக தேசிய வீடமைப்பு அதிகாரசபை அறிக்கை சமர்ப்பித்துள்ளதாகவும், இந்த முறைகேடு குறித்து அமைச்சு மட்டத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும்அமைச்சரவை பேச்சாளர்நளிந்தஜயதிஸ்ஸசெவ்வாய்க்கிழமை தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் துரிதகரமான வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் மத தலங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன என்பதை குறிப்பிட வேண்டும்.சட்டத்தின் பிரகாரமே நான் அபிவிருத்தி பணிகளை மேற்கொண்டேன்.

நாட்டுக்கான அபிவிருத்தி பணிகளை செய்ததும் ஒரு குற்றமாக கருதும் தரப்பினர் இந்த நாட்டில் உள்ளார்கள்.ஆளும்தரப்பிலும் உள்ளார்கள்.நாட்டினதும், நாட்டு மக்களினதும் நலனுக்காகவே செயற்பட்டேன். ☞ 6

### ஷானி, ரவி நியமன விடயத்தில்

## உண்மையை தெளிவுபடுத்தவேண்டும் பேராயர் கர்த்தினால் மல்க்கம் ரஞ்சித்

### நாமல் ராஜபக்ச வலியுறுத்து

தேசிய மக்கள் சக்தியின் அரசியல் செயற்பாட்டாளர்களாக செயற்பட்ட ஷானி அபேசேகர மற்றும் ரவி செனவிரத்ன ஆகியோரின் நியமனம் தொடர்பில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்ட விடயம் பாரதூரமானது. இவ்விடயத்தில் ☞ 2

## ரூ. 110 கோடி தங்க கடத்தல் முறியடிப்பு கட்டுநாயக்காவில் சந்தேகநபர் கைது

கட்டுநாயக்கசர்வதேசவிமானநிலையத்தில்சுமார் 110 கோடி ரூபாய் பெறுமதிமிக்க தங்கத்தைக் கடத்தி வந்தார் என்ற சந்தேகத்தில் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இலங்கை வரலாற்றில் விமானப் பயணி ஒருவரினால்சட்டவிரோதமானமுறைகள்நாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுக் கைப்பற்றப்பட்ட பெருமாளான தங்கம் இதுவே என்று சுங்க ஊடகப் பேச்சாளர் சிவலி அருக்கொட இதன்போது தெரிவித்தார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் செவ்வாய்க்கிழமை காலை சுங்க பிரிவினர் சந்தேகத்திற்கிடமான பயணி ஒருவரை தடுத்து நிறுத்தி சோதனையிட்டுள்ளனர் அவரின் பயணப் பொதியிலிருந்து பெருமாளான தங்கம் ☞ 6

### 2026 வரவு செலவுத் திட்டத்திற்காக

## நிதி அமைச்சு அதிகாரிகளோடு அரசுத் தலைவர் கலந்துரையாடல்

2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிப்பது தொடர்பான பூர்வாங்கத் வரவு செலவுத் திட்ட திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் போக்குகள் தொடர்பாக அரசுத்தலைவர் அநுரகுமாரதிசாநாயக்க மற்றும்நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் நேற்று பிற்பகல் அரசுத் தலைவர் செயலகத்தில் இடம்பெற்றது.

தற்போதைய நிதி நிலைமை குறித்து அரசுத் தலைவர் நிதியமைச்சின் ☞ 2

## நீதிமன்றக் கொலை வழக்கில் சந்தேகநபர் ஒருவருக்கு பிணை

கொழும்பு நீதிவான் மன்றின் 5 ஆம் இலக்க அறையில் வைத்து கனேமுல்ல சஞ்சீவ சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று கூறப்படும் பிரதான சந்தேகநபர் தப்பிச் செல்வதற்கு மோட்டார் சைக்கிளை வழங்கி உதவி ஒத்தாசை வழங்கிய தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அத்துருகிரிய பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் கொன்ஸ்டபிள்ஹஷிதரொஷான்என்பவரை ☞ 6

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

சொன்னாலும் தேர்தல் நடைபெற்று சுமார் 2 மாதங்கள் நிறைவடைந்துள்ள போதிலும், 50இற்கும் மேற்பட்ட சபைகளில் ஆட்சி அதிகாரத்தை அமைக்க முடியாமல் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு கிழக்கில் இந்த நிலை இல்லை. ஆனால் அதற்கு வெளியே பல சபைகளைப் பல்வேறு காரணங்களால் கூட்ட முடியாமல் இருக்கின்றது. உறுப்பினர்கள் சபை அமர்வுகளில்பங்கேற்காமை,உறுப்பினர்களின் பெயர்களை வர்த்தமானியில் வெளியிடத் தவறியமை மற்றும் நீதிமன்ற உத்தரவுகள் காரணமாக குறித்த 50 சபைகளில் அதிகாரம் நிறுவப்படவில்லைஎனத்தெரிவிக்கப்படுகிறது.

மேலும்,பெண்பிரதிநித்துவம்தொடர்பான பிரச்சினைகள் காரணமாக, வனாத்தவில்லு பிரதேச சபையின் அதிகாரம் இன்றுவரை நிறுவப்படவில்லை.

முழு உறுப்பினர்களில் 50% வீதமானவர்கள் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளாமல் இருப்பதாலும், சில உறுப்பினர்கள்வேண்டுமென்றேகூட்டத்திற்கு வராமல் புறக்கணித்து வருவதாலும் இந்த நிலைமை உருவாகியுள்ளதாக கூறப்படுகிறது.

கடந்த மே 6 ஆம் திகதி 337 உள்ளூராட்சி மன்றங்களுக்காக தேர்தல் நடைபெற்ற நிலையில், இதில் சுமார் 8,000 வேட்பாளர்கள் போட்டியிட்டிருந்தனர்.

..................................................

இதுவும் உள்ளூராட்சி சபை தொடர்பான ஒரு தகவல்தான். வலி. வடக்கு பிரதேச சபையில் கட்சியின் தீர்மானத்திற்கு எதிராக, கட்சி நிறுத்திய வேட்பாளரை ஆதரிக்க மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்த உறுப்பினர் பொன்னம்பலம் இராஜேந்திரம் கட்சியிலிருந்து உடனடியாக, சபைக் கூட்டம் நடந்த அன்று மாலையே சூட்டோடு சூடாக இடைநிறுத்தப்பட்டிருந்தார். இது தொடர்பாக கட்சியின் செயலாளர் அவருக்கு அனுப்பியிருந்த கடிதம் ஊடகங்களிலும் உடனேயே வெளியாகி இருந்தது.

கட்சியிலிருந்து தான் இடைநிறுத்தப் பட்டதற்கு எதிராக இரஜேந்திரம் யாழ். நீதிவான் மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கில் கட்சியின் முடிவுக்கு எதிராக அவர் இடைக்காலத் தடை விதிக்கும்படி கோரியிருந்தார். நேற்று அதன் மீது நீதிவான் கட்டளை பிறப்பித்தார். மனுதாரர் கேட்டபடி இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்க முடியாது என்று நீதிவான் தனது கட்டளையில் தெரிவித்துவிட்டார்.

பிரதேச சபை தலைவர், உப தலைவர் தெரிவுகளின்

போதும் தான் நடுநிலை வகிக்கிறார் என்று இராஜேந்திரம் அறிவித்திருந்தார். தவிசாளர்களைத் தெரிவு செய்வதற்கு இரகசிய வாக்கெடுப்பாபகிரங்கவாக்கெடுப்பாநடத்துவது என்றவிடயத்திலும் கட்சி முடிவுக்கு எதிராகவே செயற்பட்டார். அதற்காக அவரிடம் விளக்கம் கோரியும், அவரைக் கட்சி யில் இருந்து இடைநிறுத்தியும் கட்சியின் பொதுச்செயலாளர் அவருக்கு அறிவித்திருந்தார்.

கட்சியில் அந்த முடிவை இரத்துச் செய்து உத்தரவிடக் கோரியும, அந்த முடிவுக்கு இடைக்காலத் தடை விதிக்க வலியுறுத்தியும், இதுபோன்ற கட்சியின் இடைநிறுத்தல் முடிவுகளை பகிரங்கப்படுத்தக்கூடாது என்று வழிகாட்டுதல் பணிப்புரை வழங்கும்படி வேண்டியும் இந்த வழக்கு யாழ்ப்பாணம் மாவட்ட நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மனுதாரர் சார்பில் சட்டத்தரணி சுபாகர் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தார். வழக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மனுதாரர் தரப்பு சட்டத்தரணிதனிஒருதரப்பாகமுன்னிலையாகி தமது விண்ணப்பத்தை முன்வைத்தார்.

வழக்கைப் பரிசீரித்த மாவட்ட நீதிபதி சதீஸ்வரன், இடைக்கால உத்தரவு தொடர்பான கட்டளையை நேற்றுப் புதன்கிழமை வழங்குவதாகத் தெரிவித்து இருந்தார். அதன்படி நேற்றுக் கட்டளை வழங்கப்பட்டது.

பிரதேச சபைத் தலைவர், உப தலைவர் தேர்வு தொடர்பாகக் கட்சியின் நிலைப்பாடு தமக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை என்று மனுதாரர் தமது மனுவில் குறிப்பிட்டிருந்தார். ஆனால், அவரிடம் விளக்கம் கோரி பொதுச்செயலாளர் அனுப்பிய கடிதத்தில், அந்த விடயம் அவருக்குத் தெளிவாக அறிவுறுத்தப்பட்டிருந்தது என்பதைப் பொதுச்செயலாளர் குறிப்பிட்டிருக்கின்றமையை நீதிபதி தமது நிராகரிப்பு உத்தரவில் சுட்டிக்காட்டினார்.

கட்சிவிளக்கம்கோரியுள்ளது. விளக்கத்தைப் பார்த்து ஒரு முடிவை – தீர்மானத்தை – கட்சி எடுப்பதற்கு முன்னர் நீதிமன்றத்தை அணுகி தடை விதிக்கும்படி கோர வேண்டிய தேவை மனுதாரருக்கு அவசரமாக எழுந்திருப்பதாக நீதிமன்றம் கருதவில்லை என்று நீதிபதி தமது இன்றைய உத்தரவில் சுட்டிக்காட்டினார். எனினும், வழக்கின் எதிர் மனுதாரர்களான கட்சியின் தலைவர் சிவஞானம், கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் ஆகியோருக்கு நோட்டீஸ் அனுப்ப நீதிபதி கட்டளை வழங்கினார். அத்துடன் இந்த வழக்கை எதிர்வரும் ஒகஸ்ட் 6 மீண்டும் அழைக்கத் திகதியிட்டார்.

இராஜேந்திரம் இந்தவழக்கில்தனதுசார்பில் அணைத்திருக்கக்கூடிய இரு ஆவணங்கள் மிகவும் கவனத்துக்குரியவை. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் நாடாளுமன்றக்குழுத்தலைவருமான சிறீதரன் கட்சியின் தலைவருக்கு, இராஜேந்திரத்தின் விலக்கலை ஆட்சேபித்து அனுப்பிய ஒரு கடிதமும் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் முன்னாள் தலைவர் மாவை சேனாதிராசாவின் புதல்வருமான கலையமுதன் வழங்கிய சத்தியக்கடதாசியுமே வழக்காளியால் இணைக்கப்பட்டிருந்த இரு ஆவணங்கள்.

கட்சியின் மத்திய குழுக் கூட்டங்கள் ஒழுங்காகநடத்தப்படவில்லைஎனத்தெரிவித்து கலையமுதன் கடிதம் வழங்கியுள்ளார். அதாவது இராஜேந்திரத்தை இடைநிறுத்தும் முடிவு கட்சியால் எடுக்கப்பட்டதல்ல, அது செயலாளரின் தனிப்பட்ட முடிவு என்று காட்ட இந்த ஆவணங்களின் மூலம் அவர்கள் முயன்றிருக்கிறார்கள். அது நீதிமன்றத்தினால் கவனத்தில் கொள்ளப்படுமா என்பது வழக்கு முடிவில் தெரியும். என்றாலும் கட்சிக்குள் சிறீதரன் அணி இன்னும் தீவிரமாக சுமந்திரன் அணிக்கு எதிராக மோதிக்கொண்டே இருக்கின்றது என்பது மட்டும் இதன் மூலம் வெளிப்படையாகத் தெரிகிறது.

கடந்த ஓராண்டுக்கும் மேலாக இப்படி இவர்கள் மோதி மோதியே சுமந்திரன் அணியினரிடம் கட்சியைத் தாரை வார்த்து விட்டார்கள். கட்சியைக் கைப்பற்றக்கூடிய பலமோ வியூகமோ இன்றி தொடர்ந்தும் சுமந்திரன் அணியினருடன் மோதுவதால் கட்சிக்குள் அந்த அணியைத்தான் பலப்படுத்துகிறார்களே தவிர, வேறு எதனையும் சாதித்ததாக இல்லை என்பது மட்டும் உண்மை.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஜூலை 24....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறைக்கூடங்களுக்குள் நயவஞ்சகமாகப் படுகொலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளுக்கான நீதி நியாயத்தை கோருகின்ற 'பொது நினைவேந்தலும்'

30 ஆண்டுகள் கடந்தும் விடுதலையின்றி சிறைகளுக்குள் வாடிக்கொண்டிருக்கின்ற தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்திய நூதன கவனயீர்ப்புப் போராட்டமும் மக்களது ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படவுள்ளது.

இவ்வாறான அறப் பணிகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளும் பட்சத்திலேயே, சமூகத்தின் பெயரில் சிறைவாடும் எமது உறவுகளான 'தமிழ் அரசியல் கைதிகளுக்கு' நீதிநியாயமும்விடுதலையும்கிடைக்கப்பெறும் எனும் நிலமை ஏற்பட்டுள்ளது.

மனிதநேயம் கொண்ட நல்லுள்ளங்கள் ஒருங்கிணைந்து முன்னெடுப்புகளை மேலும் வலுப்படுத்தக்கூடியவகையிலானஉதவிகளை, 'விடுதலைக்கான திறவுகோல்களை கனதியாக்குவோம்' என்கின்ற 'உண்டியல் திட்டத்தின் ஊடாக' மனமுவந்து நல்க வேண்டுமென அன்புரிமையோடு வேண்டி நிற்கின்றோம்.

இந்தப் பொதுவெளி கவனயீஈர்ப்புப் போராட்டத்தில், இன மத மொழி கடந்து, வயது பால் வேறுபாடின்றி, கட்சி பேதங்களுக்கு அப்பால் ஒன்றிணைவோம். சமூகநீதி சமூகநியாயத்தும் விடுதலைப் பயணம் நோக்கிய செயற்பாடுகளை பலப்படுத்தி முன்நகர்வோம்.

நல்லெண்ணமும் கருணை உள்ளமும் கொண்ட அனைவரும் சிரமம் பாராது வந்து கலந்து கொள்வதன் மூலமே, இலங்கை அரசிற்கும் சர்வதேசத்திற்கும் ஒரு திரட்சிமிகு அழுத்தத்தை கொடுத்து அன்புக்குரிய எமது சிறையுறவுகளை உயிர்ப்புடன் விடுவிக்க முடியும்.

அனைவரும் ' ஒன்றிணைந்து குரல் கொடுத்து உறவுகளை சிறை மீட்போம் வாருங்கள்..!' என 'குரலற்றவர்களின் குரல்' அமைப்பினராகியநாம்எமதுமக்களைநோக்கி உரிமையோடு அழைப்பு விடுக்கின்றோம் என தெரிவித்தார்.

## எதிர்க் கட்சிகள்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும்தரப்பு தேர்தல் பரப்புரை மேடைகளில் குறிப்பிட்டது. பல பில்லியன் ரூபா மோசடி செய்தவர்கள்உள்ளார்கள்.அந்தவழக்குகளுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும்.

வெளிநாடுகளில் பதுக்கி வைத்துள்ள சொத்துக்களை முடக்குவதாக குறிப்பிட்டார்கள், உகண்டாவில் இருந்து நிதியை கொண்டு வருவதாக குறிப்பிட்டார்கள்.ஆனால் இன்று அவற்றைமறந்துவிட்டு பிரதானஎதிர்க்கட்சியை முடக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள்.

நாடாளுமன்றத்துக்குள்ளும், நாடாளுமன் றத்துக்கு வெளியிலும் எதிர்க்கட்சிகளை அச்சுறுத்தும் செயற்பாடுகளை ஆளும்தரப்பு பெரும்பான்மை பலத்தை வைத்துக் கொண்டு மேற்கொள்கிறது.அரசாங்கத்தின்முறைகேடான செயற்பாடுகளை வெளிப்படுத்தும் போது அந்த முறைகேடுகள் குறித்து ஆராயாமல் முறைப்பாடுகளை முன்வைக்கும் தரப்பினர் இன்று இலக்குப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

உள்ளுராட்சிமன்ற அதிகார சபைகளை ஸ்தாபிக்கும்போதுகட்சியின்கொள்கைமற்றும் தீர்மானங்களுக்குஎதிராகசெயற்பட்டகட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தேசிய மக்கள் சக்திக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக ஒருபோதும் தீர்மானிக்கவில்லை.

எதிர்வரும்தேர்தலில் ஆட்சியைகைப்பற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள சந்தர்ப்பத்தில் எவ்வாறு நாங்கள் தேசிய மக்கள் சக்திக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்.எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்துள்ளதால், எதிர்க்கட்சிகளை முடக்குவதற்கு ஆளும்தரப்புதீவிர அவதானம் செலுத்தியுள்ளது என்றார்.

## நிதி அமைச்சு....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகளிடம் கேட்டறிந்ததுடன் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளைக் கோருவதற்கான சுற்றறிக்கை தற்போது வெளியிடப்பட்டுள்ளதாகவும் அந்தந்த நிறுவனங்கள் தொடர்பான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை உரிய செலவின வரம்பிற்குள் சமர்ப்பிப்பதற்கு ஜூலை 31வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் நிதியமைச்சின்அதிகாரிகள்அரசுத்தலைவரிடம் தெரிவித்தனர்.

2026 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நாட்டை தற்போதைய நிலையிலிருந்து மீட்டெடுக்கஅவசியமானமுக்கியதுறைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டியதன் அவசியத்தை அரசுத் தலைவர் இங்கு வலியுறுத்தினார்.

இதன்படி டிஜிட்டல் மயமாக்கல், பொதுப் போக்குவரத்தை வலுவூட்டல், பொருளாதாரத்திற்கு கிராமிய சமூகத்தின் பங்களிப்பு போன்றவற்றின் அடிப்படையிலான செயற்திட்டங்களில்அதிககவனம்செலுத்துமாறு அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

அத்துடன் வேலைத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீட்டை வழங்கினால் மாத்திரம் போதாது என்றும் குறித்த வேலைத் திட்டங்களின் பயன்கள் மக்களுக்கு கிடைக்கிறதா என்பதை ஆராய்ந்து அதற்குத் தேவையான பொறிமுறைகளை பலப்படுத்த வேண்டும் எனவும்அரசுத்தலைவர் மேலும்குறிப்பிட்டார்.

தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, அரசுத் தலைவரின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெருமமற்றும்நிதிஅமைச்சின்சிரேஷ்ட அதிகாரிகள் குழுவினரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## அமெரிக்காவின் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமக்கு அதிகரிக்கப்பட்டிருந்த 44 வீத தீர்வை வரியை 30வீதமாக்கக குறைத்துக்கொள்ள ஆளும்தரப்புநடவடிக்கை எடுத்திருக்கிறது. அமெரிக்காவில் உள்ள இலங்கைக்கான வதிவிடப் பிரதி மஹிந்த சமரசிங்க, அவருக்கு இருக்கும் அனுபவம் மற்றும் தொடர்புகள் காரணமாகவே இந்தளவேனும் ஆளும்தரப்புக்கு வரிகளைக் குறைத்துக்கொள்ள முடியுமாகி இருக்கிறது. என்றாலும் இந்தத தொகையும் எம்மை பொறுத்தவரை அதிகமாகும். ஏனெனில் எமக்கு அமெரிக்க சந்தைப் போட்டியாக இருக்கும் வியட்நாம். இந்தியா போன்ற நாடுகளுக்கு எம்மைவிட குறைந்த வரித் தொகையே விதிக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன் ஆளும்தரப்பு இந்த வரித் தொகையை மேலும் குறைத்துக் கொள்வதற்கான கலந்துரையாடுவதற்கு மீண்டும் குழுவொன்றை அமெரிக்காவுக்கு அனுப்பதீர்மானித்திருக்கிறது. அங்கு யாருடன் கலந்துரையாடுவது என்று,திட்டமிடலுடன் செல்ல வேண்டும். அவ்வாறு இல்லாமல் அங்குள்ள வர்த்தக ஆணையாளர் போன்று சாதாரண அதிகாரிகளுடன் கலந்துரையாடி, எமது இலக்கை அடைந்துகொள்ள முடியாது. இந்தியா இராஜதந்திர ரீதியில் செயற்பட்டே வரிக் குறைப்பைப் பெற்றுக்கொண்டுள்ளது. அவ்வாறான முறையொன்றையே ஆளும்தரப்பும் கையாளவேண்டும்.

அதேநேரம் 30 வீத வரி என்பது ஏற்கனவே இருந்த வரியைவிட மூன்று மடங்கு அதிகமாகும். இவ்வாறான நிலையில் , நாங்கள் அமெரிக்காவுக்கு அதிகமாக ஏற்றுமதி செய்யும் ஆடை உற்பத்திகளின் விலையும் மூன்று மடங்கு அதிகரிக்கும். அவ்வாறான நிலையில் எமது ஆடை உற்பத்திகளின் கொள்வனவு குறையும். அப்போது ஏற்றுமதி வீதமும் குறைவடையும். இந்த நிலை தொடரும்போது ஆடைத் தொழிற்சாலைகளில் ஆடை உற்த்தியும் வீழ்ச்சியடையும். இறுதியில் தொழிலில்லாத பிரச்சினை ஏற்படும். ஆனால் ஆளும்தரப்பு இதனை உணர்வதில்லை.

அமெரிக்காவுக்கான எமது ஏற்றுமதிகளில் நூற்றுக்கு 66 சதவீதம் ஆடை ஏற்றுமதியாகும். இது பாதிக்கப்பட்டால் எமக்கான டொலர் வருமானம் குறைவடையும். டொலர் வருமானம் குறைவடையும்போது எமது கையிருப்பு குறைவடையும். கையிருப்பு குறைவடைந்தால், எமக்குளிபொருள், ளிவாயு என்பவற்றைக் கடனுக்கு பெற்றுக்கொள்ள முடியாமல்போகும். தற்போது எமது கையிருப்பு 6,1 பில்லியன் டொலர். அதனால் வெளிநாடுகள் எமக்கு கடனுக்கு பொருட்களை வழங்குகின்றன. இந்த கையிருப்பு குறைவடைந்தால் எந்த நாடும் எமக்கு கடனுக்கு பொருட்களை வழங்காது. அப்போது நாங்கள் பணம் செலுத்தியே அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டிவரும்.

மேலும் ஆளும்தரப்பு அடுத்த வருடம் மறுசீரமைக்கப்படாத கடனாக 4 பில்லியன் டொலரை செலுத்த வேண்டி இருக்கிறது. அதேநேரம் இந்த வருடத்துக்கான ஆளும்தரப்பின் வரி வருமான இலக்கு 21195 பில்லியன் ரூபா. ஆனால் கடந்த 6 மாதங்களில் ஆளும்தரப்புக்குத் தனது இலக்கைவிட 120 பில்லியன் ரூபா குறைந்துள்ளது. இவ்வாறான நிலையில், அமெரிக்காவின் வரி அதிகரிப்பால் எமக்குக் கிடைக்கும் டொலர் வருமானம் மேலும் குறைவடையும்போது வருட இறுதியில், ஏற்படும் நெருக்கடிக்கு முகம்கொடுக்க ஆளும்தரப்பு வரிகளைஅதிகரிக்கநடவடிக்கை எடுக்கும். அதன்போது மக்கள் மீதே அதன் சுமை ஏற்றப்படும்.

அதனால்ஆளும்தரப்புஇராஜதந்திரரீதியில் செயற்பட்டு அமெரிக்காவின் தீர்வை வரியை மேலும் குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அது எமது ஆடை தொழிற்சாலைகளுக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்றார்.

## உண்மையை....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மீது பழிபோட ஆளும்தரப்பு முயற்சிக்கிறது. உண்மையை கத்தோலிக்க சபை வெளிப்படுத்த வேண்டுமென ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும்,நாடாளுமன்ற உறுப்பினருமானநாமல்ராஜபக்ஷதெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நடுத்தர மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் இந்த ஆளும்தரப்பு செயற்படுகிறது. ஆட்சிக்குவருவதற்குமுன்னர்நடுத்தரமக்களை பாதுகாப்பதாக குறிப்பிட்டார்கள்.ஆனால் இன்று நடுத்தர மக்களின் தொழில் நடவடிக்கைகளை

தொடர்ச்சி 6ம் பக்கம்....


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
E
KNOWLEDGE IS POWER
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
January 25
FREE
February 5
தரம் 6
தொடக்கம்
தரம் 11
வரை


உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள்
ஆரம்பம்
20.04.2025
கற்கும் போதே
தொழில் ஆற்றக்
கூடிய வாய்ப்பு
●CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
●NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDr
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## முன்பள்ளிக் கல்வி மீதும் தீவிர அக்கறை அவசியம்

இலங்கை, தனது இலவசக் கல்வி முறைமைப்பை பெருமையுடன் எடுத்துரைக்கும் நாடாகப் பரிணமித்துள்ளது. ஆரம்பக் கல்வி முதல் உயர் கல்விவரை அரசின் முழுப் பொறுப்புடனான கட்டமைப்பில் கல்வி இங்கு இலவசமாக வழங்கப்படுகின்றது. இருப்பினும், கல்வியின் ஒரு மிக முக்கியமான கட்டமான முன்பள்ளிக் கல்வி (Early Childhood Education) பற்றிய அணுகுமுறையில் தவறுகள் உள்ளன. இந்தத் தவறுகளைச் சுட்டிக்காட்டும் வகையில், சமீபத்தில் வெளியான மனித உரிமைகள் கண்காணிப்பகம் (Human Rights Watch) மற்றும் உலக வங்கி (World Bank) ஆகிய நிறுவனங்களின் அறிக்கைகள், விழிப்புணர்வுக்குரியதாக அமைகின்றன.

உலக வங்கி தரவுகளின்படி, ஒரு குழந்தையின் பிறப்புக்கு முந்தையநிலையிலிருந்தேஐந்தாம்வயதுவரையிலானகாலப்பகுதி மிக முக்கியமான வளர்ச்சி கட்டமாக கருதப்படுகிறது. இந்தக் காலத்தில் நரம்பியல் வளர்ச்சி வேகமாக நடைபெறுவதால், குழந்தைகளின்அறிவாற்றல், சமூகப்புரிதல்மற்றும்உணர்வுப்பூர்வ திறன்கள் தீர்மானிக்கப்படும். இலங்கையில் –2 வயதிற்குள் உள்ள குழந்தைகளுக்கான மருத்துவ மையங்கள் வழியிலான கண்காணிப்பு நடைமுறைகள் நன்கு அமைந்துள்ளன. ஆனால் 3– முதல் 5 வரையான வயதிற்கான மையங்களின் செயற்பாடு மிகவும் பின்னடைந்த நிலையிலே காணப்படுகிறது.

நாட்டில் 17,000க்கும் அதிகமான முன்பள்ளிக் கல்வி மையங்கள் உள்ளபோதிலும், அவை பெரும்பாலும் தனியாரின் கட்டுப்பாட்டில் செயல்படுகின்றன. அரசின் நேரடி கட்டுப்பாட்டில் உள்ள மையங்கள் மொத்தத்தில் 20%க்கும் குறைவாக உள்ளன. இதன் விளைவாக, இந்த மையங்களில் கட்டண வசதி அதிகமாக காணப்படுகின்றது. வறுமை கோட்டுக்கு கீழே வாழும் பெருமளவிலான மக்கள் தொகைக்கு, இந்தக் கட்டணங்கள் ஒரு தடையாக மாறுகின்றன. அதனால், ஏராளமான பிள்ளைகள், அவர்களின் கல்விப் பயணத்தை ஆரம்பிக்கவே முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இந்த நிலையைப் பற்றி பேசிய சில முன்பள்ளி ஆசிரியர்கள், 'பிள்ளைகள் வருவதில்லை. கட்டணம் செலுத்த முடியாமல் தவிக்கின்றனர். பெற்றோர்களின் கண்களில் நெருக்கடிகளைக் காணலாம். நாங்களும் கட்டணம் வசூலிக்காமல் இயங்க முடியாத நிலை' எனக் கூறுகின்றனர். இது, இலவசக் கல்வி என்ற தேசியக் கொள்கையை முற்றிலும் முரணாக அமைத்துவிடுகிறது.

முன்பள்ளிக் கல்வியின் கோராமை, குழந்தைகளின் தொடக்க கல்வியிலும் தாக்கத்தை ஏற்படுத்துவதைப் பல தலைமை ஆசிரியை/ஆசிரியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். 70% மாணவர்கள் முன்பள்ளிப் பின்னணி இன்றி முதன்முறையாகப் பள்ளி செல்லும் போது, கற்றலில் சிரமம் காணப்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். இது, கல்வியின் முதல் கட்டமே உரிய முறையில் அமையவில்லை என்ற சமூகவியல்பை வெளிக்கொணர்கிறது.

மேலும், கற்றல்மற்றும்உடல்இயலாமைஉள்ளகுழந்தைகளுக்கு முன்பள்ளிக் கட்டம் மிகவும் முக்கியமானதாக அமைகின்றது. அவர்கள் மீது ஏற்படக்கூடிய சமூகப் புறக்கணிப்புகள் மற்றும் அவமதிப்புகளைத் தவிர்க்கவும், அவர்களின் திறனை மேம்படுத்தவும் முன்பள்ளிக் கல்வியே முக்கியத்துவம் பெறுகின்றது.

இந்நிலையில், கல்விச் சீர்திருத்தங்களை நோக்கி நகரும் ஆளும்தரப்பு, முன்பள்ளிக் கல்வியைப் புறக்கணிக்கக் கூடாது. தொடக்கக் கல்வியின் ஒழுங்கமைக்கப்பட்ட, இலவச மற்றும் சட்டமுறை அமைப்பை உருவாக்கும் தன்னிலை நமது நாட்டிற்கு ஏற்பட்டுவிட்டது. இலவசக் கல்வி என்பது, ஒரு குழந்தையின் ஆறாம் வயதில் ஆரம்பிக்க வேண்டிய ஒன்று அல்ல. அது, ஒரு குழந்தையின் வாழ்நாளைத் தீர்மானிக்கும் முதல் படி ஆகவே இருக்க வேண்டும்.

எனவே, கல்விச் சீர்திருத்தங்களில் உண்மையான மாற்றத்தை கொண்டுவர விரும்பும் அரசாங்கம், முன்பள்ளிக் கல்விக்கான சட்டரீதியான அடித்தளமும், நிதி ஆதாரங்களும், ஆசிரியர் பயிற்சிகளும் வழங்கும் ஒரு சக்திவாய்ந்த திட்டத்தை உடனடியாக உருவாக்க வேண்டும். இல்லையெனில், கல்வியில் சமத்துவம் என்ற கனவு, பிறப்பிலேயே புறக்கணிக்கப்படும் குழந்தைகளுக்குப் பலிக்குமா? என்ற கேள்வியுடன் தொடரும்.

# மயிலிட்டி கலைமகள் ம.வித்திக்கு 8 கணினிகள் நேற்று அன்பளிப்பு

மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்யாலயத்திற்கு ஒரு தொகுதி கணினிகள் நேற்று அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இந்தப்பாடசாலையானது படையினரின் முகாம் பகுதியிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் அடிப்படை வசதிகள் போதுமான அளவில்இல்லாமலேயே இயங்கிவருகின்றது.

இந்த நிலையில், பாடசாலையில் கற்கும் மாணவர்களுக்கான சமூக ஊடகக் கற்கைக்கான வசதிகளை ஏற்படுத்தித் தரும்படி கல்லூரி அதிபரால் கோரிக்கை வி-டுக்கப்பட்டிருந்தது. அதனை ஏற்று டேவிட் பிரிஸ் குழுமத்தினால் 8 கணினிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. கணினி அறை ஒன்றும் மறுசீரமைத்து வழங்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் கல்விக்காக ஒரு தொகுதி நூல்களும் டேவிட் பிரிஸ் நிறுவனத்தால் பாடசாலை நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

நிகழ்வில் டேவிட் பீரிஸ் குடும்பத்தில் குழும பணிப்பாளர் ரோகண திசாநாயக்க, சந்தைப்படுத்தல் முகாமையாளர் ஜெயந்திர ரத்நாயகே, பாடசாலை அதிபர் ஆசிரியர் மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# வடமாகாணத்தில் 5 செயலர்கள் ஆளுநரால் நேற்று நியமனம்

## வவுனியா மாநகர சபைக்கு ஆணையாளரும் நியமிப்பு

வடக்கு மாகாணத்தின் 5 செயலாளர்கள், மாநகர சபை ஆணையாளர் மற்றும் பதில் ஆணையாளர் ஆகியோருக்கான நியமனங்கள் ஆளுநர் செயலகத்தில் வைத்து இன்று புதன்கிழமை நண்பகல் (16.07.2025) வழங்கி வைக்கப்பட்டன.

பருத்தித்துறை பிரதேச செயலராகக் கடமையாற்றியசத்தியசீலன்வடக்குமாகாண சபைக்கு புதிதாக உள்வாங்கப்பட்டிருந்த நிலையில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்குமாகாணஆளுநரின்செயலாளராக கடமையாற்றிய நந்தகோபாலன், மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கோப்பாய் பிரதேச செயலராகக் கடமையாற்றிய சிவஸ்ரீ வடக்கு மாகாண சபைக்கு புதிதாக உள்வாங்கப்பட்டிருந்த நிலையில், வடக்கு மாகாண விவசாய மற்றும் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி, நீர் விநியோக மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சின் பதில் செயலாளராகக் கடமையாற்றிய சோதிநாதன் அதே அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அதேநேரம், மாகாண காணி பதில் ஆணையாளராகவும் அவரே நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் பதவி வெற்றிடமாக இருந்த நிலையில், வடக்கு மாகாண விவசாய மற்றும் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி, நீர் விநியோக மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய சிறீ நியமிக்கப்பட்டுள்ளார்.

மகளிர் விவகாரம், புனர்வாழ் வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய வாகீசன், வவுனியா மாநகர சபையின் ஆணையாளராக நியமிக்கப் பட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் தனுஜாவும் கலந்துகொண்டிருந்தார்.

# வவுனியா பிரதேச பண்பாட்டு விழா இன்று

வவுனியா பிரதேசகலாசார பேரவையும் பிரதேசகலாசார அதிகாரசபையும் இணைந்து நடத்தும் பண்பாட்டு ஊர்திப்பவனியும் பிரதேச பண்பாட்டு விழாவும் இன்று இடம்பெறவுள்ளது.

பண்பாட்டுபவனி பிரதேச செயலகம் முன்பாக காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதுடன் அரங்க நிகழ்வுகள் பிற்பகல் 3 மணிக்கு வவுனியா மாநகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

பிரதேச செயலாளர் பிரதாபன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த விழாவில் கலைஞர்களுக்கான கலாநேத்ரா விருதுகளும் வழங்கப்படவுள்ளன. கதீஷன் (ஊடகத்துறை), செந்தூர்ச்செல்வன் (பரதம்), மெலிஸ்ரன் (நாடகம்), அனோஜன் (ஓவியம்), சண்முகரத்தினம் (இயல்), சிவயோகராஜா (கட்டுரை), நாகராசா (அறிவிப்பு), கந்தப்பு (மெல்லிசை) , சந்திரகாந்தன் (வாத்திய இசை) , தர்மகுலசிங்கம் (வாத்திய இசை) ஆகிய கலைஞர்கள் விருதினை பெறுகின்றனர்.

'வவுனியாவின் குரல்' நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 18வயதுக்கு உட்பட்டவர்கள் மற்றும் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் பிரிவில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்களுக்கான விருதுகளும் வழங்கி வைக்கப்படவுள்ளன.

இவ் பண்பாட்டு பவனி ஊர்தியானது பிரதேச செயலக வரலாற்றில் முதன் முறையான அனைத்து கிராம அலுவலர்கள் பிரிவுகளையும் உள்ளடக்கி அவர்களின் கிராமத்தினை பிரதிபடுத்தும் வகையில் இடம்பெறவுள்ளமை சிறப்பம்சமாகும்.

# உணவு பாதுகாப்பையும் விலைக்கட்டுப்பாட்டையும் வேலணை சபை பகுதிக்குள் உறுதிப்படுத்துவோம்

## உறுப்பினர் அனுஷியா சபைக் கூட்டத்தில் கோரிக்கை

வேலணைப் பிரதேசசபை எல்லைக்குள் உணவுப் பாதுகாப்பையும் பொருட்களின் விலைக் கட்டுப்பாட்டையும் உறுதிப்படுத்துவதற்கு பிரதேச சபை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று உறுப்பினர் அனுஷியா கோரிக்கை விடுத்தார்.

பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று தவிசாளர் அசோக்குமார் தலைமையில் காலை 10.00 மணிக்கு சபா மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் உரையாற்றிய அனுஷியா மேலும் தெரிவித்ததாவது:

எமது வேலணை பிரதேசமானது பொருளாதார ஈட்டலில் பின்தங்கிய மக்களைக் கொண்டதாக இருக்கின்ற நிலையில் மக்களுக்கு கிடைக்கின்ற பொருட்களுக்காவது உணவுப் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாட்டை உறுதிசெய்வதற்கு எமது பிரதேச சபை கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

பல பொருட்கள் குறிப்பாக, அத்தியாவசியப் பொருகள், மரக்கறி வகைகள் மற்றும் கடலுணவு பொருட்கள் யாழ். நகரில் விற்கப்படும் விலையைவிட இரட்டிப்பான விலையிலும் அதிகமாகவே இங்கு விற்கப்படுகின்றன.

குறிப்பாக கடல் வளம் எமது பிரதேசத்தின் முதற்தர வளமாக இருக்கின்றது. கடந்த காலத்தில் கடற்றொழில் அமைச்சும் அத்தொழிலை முன்னெடுக்கும் மக்களுக்கு பலதரப்பட்ட மானியங்கள் மற்றும் சலுகைகளை தொடர்ச்சியாக வழங்கிய வண்ணமே இருந்திருக்கின்றது. அதேபோன்று வெளிநாடுகளும் உதவிகளை மக்களுக்கு பலவற்றை வழங்கி வருன்றன.

ஆனாலும் கடலுணவு பொருட்கள் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு மலிவாகக் கிடைப்பதில்லை என்ற ஏக்கம் வேலணை வாழ் மக்களிடம் ஏக்கமாகவே இருக்கின்றது. இதற்கு சந்தைப்படுத்தலில் வெளியூர் வியாபாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதே காரணமாக இருக்கின்றது.

இது கடற்றொழிலாளர்களுக்கு நன்மையானதாக இருக்கின்ற ஒரு விடயம்தான். அது வரவேற்கத்தக்கதாகவும் உள்ளது. ஆனால் உள்ளூர் நுகர்வோர் அதனால் பெரும் ஏமாற்றத்தையே சந்திக்கின்றனர்.

அந்த வகையில் கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்படாத வகையில் மலிவாக உள்ளூர் நுகர்வோருக்கு, குறிப்பாக மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதை அல்லது கிடைப்பதை உறுதி செய்வதில் எமது பிரதேச சபைக்கும் பொறுப்புள்ளது.

அதேபோன்று அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் அடிக்கடி உயர்வதால், சில வர்த்தகர்கள் பொருட்களைப் பதுக்கி வைத்து செயற்கையாக விலையை உயர்த்துவதும் நடக்கிறது.

அதுமட்டுமல்லாது கலப்படம் செய்யப்பட்ட உணவுப் பொருட்கள், பாவனைக்கு உதவாத பொருட்கள் மற்றும் சுகாதாரமற்ற உணவுப் பொருட்கள் விற்பனை என்பனவும் பரவலாகக் காணப்படுகின்றன.

இதனால் எனது மக்களின் ஆரோக்கியமே கேள்விக்குறியாகிறது. இதற்கு உணவுப் பாதுகாப்பு மற்றும் விலைக்கட்டுப்பாடுகள் தொடர்பான சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் குறித்து பொதுமக்களிடமோ அல்லது வர்த்தகர்களிடமும் போதிய விழிப்புணர்வு இல்லை என்ற நிலையும் உள்ளது. அதுமட்டுமல்லாது துறைசார் அதிகாரிகளின் தொடர்ச்சியான கண்காணிப்பு இல்லாமையும் வர்த்தகர்கள் விதிமுறைகளை மீறுவதற்கு வாய்ப்பாக அமைகிறது.

எனவே பிரதேச மக்களின் நலன் கருதி- பின்வரும் நடவடிக்கைகளில் அக்கறை செலுத்துவது அவசியம் என நான் இந்தச் சபையில் முன்மொழிகின்றேன்.

அதனடிபையில் பிரதேச சபை உறுப்பினர்கள், உணவு ஆய்வாளர்கள், சுகாதார அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் அடங்கிய ஒரு கண்காணிப்புக் குழுவை உருவாக்க வேண்டும். குறித்த குழுவினர் சந்தைகள், கடைகள் மற்றும் உணவு பொருட்களை கையாளும் நிலையங்களில் தொடர்ச்சியான சோதனைகளை மேற்கொள்ள வேண்டும்.-

விலைப்பட்டியல் சரியான முறையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதா, பொருட்கள் பதுக்கப்படுகிறதா, தரமற்ற பொருட்கள் விற்கப்படுகிறதா என்பதை உறுதி செய்தல் வேண்டும். அத்துடன் விலைக் கட்டுப்பாட்டை மீறுவோர், பதுக்கலில் ஈடுபடுவோர் மற்றும் தரமற்ற பழுதடைந்த உணவுப் பொருட்களை விற்பனை செய்வோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும். -

அதுமட்டுமல்லாது குறித்த சட்டப் பிரிவுகளின் கீழ் வழக்குத் தொடரப்பட்டு, உரிய அபராதங்கள் மற்றும் தண்டனைகள் வழங்கப்படுவதை உறுதி செய்யவேண்டும்.

இவற்றுக்கு மேலாக உணவுப் பாதுகாப்பு, சரியான விலை நிர்ணயம் மற்றும் நுகர்வோர் உரிமைகள் குறித்து விழிப்புணர்வை சமூக மட்ட அமைப்புகள் ஊடாக மக்களிடம் கொண்டுசெல்லவேண்டும். முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்கான இலகுவான இரகசியமான வழிமுறைகள் குறித்து பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தல் வேண்டும். -

விழிப்புணர்வு சுவரொட்டிகள் மற்றும் துண்டுப் பிரசுரங்களை பொது இடங்களில் ஒட்டுதல் -வேண்டும். உணவு உற்பத்தி மற்றும் கையாளும் தரப்பினர் அனைவரும் சுகாதாரச் சான்றிதழைப் புதுப்பிப்பதை அல்லது எடுத்தக்கொள்வதை கட்டாயமாக்க வேண்டும்.

பிரதேச செயலகம், நுகர்வோர் அதிகார சபை, சுகாதார அமைச்சு மற்றும் பிற சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் நெருங்கிய ஒருங்கிணைப்பை ஏற்படுத்த வேண்டும். -

இவ்வாறான கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமும் இந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்பதுடன் மேற்கண்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம், உணவுப் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு ஆகியவற்றை உறுதிப்படுத்தி, பிரதேச மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியும் என்ற நம்பிக்கை இச்சபையில் இருக்கும் அனைவருக்கும் உண்டு என நம்புகின்றேன் என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

## உண்மையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்றாக இல்லாதொழிக்கும் வகையில் ஆளும்தரப்பு செயற்படுகிறது.

அரசுத் தலைவரின் பொது மன்னிப்பு விவகாரம் மற்றும் கொள்கலன் விடுவிப்பு விவகாரத்தில் ஆளும்தரப்பின் முறைகேடான செயற்பாடு அரச அதிகாரிகள் மீது சுமத்தப்பட்டுள்ளது. அரச சேவையாளர்கள் அரசாங்கத்துக்கு எதிராக வெகுவிரைவில் குரல் எழுப்புவார்கள்.

அரசசேவையைவினைத்திறனாக்குவதாக குறிப்பிட்டுக் கொண்டு அச்சேவையை அரசியல்மயப்படுத்தும் வகையில் ஆளும்தரப்பு செயற்படுகிறது. அரசாங்கத்தின் செயற்பாடுகளை மக்கள் வெகுவிரைவில் விளங்கிக் கொள்வார்கள்.

தேசிய மக்கள் சக்தியின் அரசியல் செயற்பாட்டாளர்களாக செயற்பட்ட ஷானி அபேசேகர மற்றும் ரவி செனவிரத்ன ஆகியோரின் நியமனம் தொடர்பில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்ட விடயம் பாரதூரமானது. இவ்விருவரும் மக்கள் விடுதலை முன்னணியின் ஊடக சந்திப்புக்களை நடத்தினார்கள்.

அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்ட விடயத்தின் உண்மையை கத்தோலிக்க சபை வெளிப்படுத்த வேண்டும். உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படுவதாக ஆளும்தரப்பு குறிப்பிடுவது வரவேற்கத்தக்கது. தேர்தல் காலத்தில் தேசிய மக்கள் சக்தி குறிப்பிட்ட பொய்களுக்கு முடிவு அப்போது தான் கிடைக்கும் என்றார்.

## ரூ. 110 கோடி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பற்றப்பட்டுள்ளது. குறித்த நபர் விமான நிலையத்திலிருந்து வெளியேற முற்பட்ட நிலையில் அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக சுங்க பிரிவினர் தெரிவித்தனர்.

இதேவேளை, சந்தேகநபரின் பயணப் பொதியில் 9 வாகன உதிரிபாகங்களும் மறைத்து வைக்கப்பட்டிருந்துள்ளன. 195 தங்க பிஸ்கட்டுகளும் 13 கிலோ கிராம் எடையுடைய தங்க நகைளும் சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டன. தங்கத்தின் எடை 35 கிலோ கிராமுக்கும் அதிகம் எனவும், அதன் சந்தைப்பெறுமதி சுமார் 110 கோடி ரூபா எனவும் சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் மதிப்பிடப்பட்டுள்ளது.

கிராண்ட்பாஸ் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய நபர் ஒருவரே சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளார். கைதான நபர் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் துபாயிலிருந்து எமிரேட்ஸ் எயார்லைன்ஸ் விமான சேவைக்கு சொந்தமான ஈ.கே 650 என்ற விமானத்தின் மூலம் நாட்டை வந்தடைந்தார் என்று விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கொலைச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களில் இருவரை 7 நாட்கள் விசேட தடுப்பு காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைத்து விசாரிக்க ஹோமாகம பதில் நீதிவான் பிரியங்கா மத்தும படபெந்தி நேற்று உத்தரவு பிறப்பித்தார்.

மேலும் மற்றைய இரு சந்தேகநபர்களையும் இன்று வரை (17) வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்த நீதவான் அவர்கள் நாளை பெல்மடுல்ல நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த படுத்துமாறு உத்தரவு பிறப்பித்தார்.

கஹவத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எந்தான கொஸ்கேல்ல பகுதியில் அண்மையில் 22 வயதுடைய பலனகூரியகம பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்ததுடன் 27 வயதுடைய யாயின்ன பிரதேசத்தைச் சேர்ந்த மற்றுமொறு இளைஞர் காயமடைந்திருந்தார்.

உயிரிழந்த இளைஞர் தனது வீட்டுக்கு அருகில் நண்பர்களுடன் கதைக்கொண்டிருந்த போது ஜீப் வண்டி ஒன்றில் வந்த அடையாளம் தெரியாத சிலர் தம்மை பொலிஸார் என அடையாளப்படுத்தி அவர்களது கைகளுக்கு கைவிலங்கு மாட்டி அங்கிருந்து அழைத்து சென்றுள்ளனர்.

குறித்த இளைஞர்கள் இருவரையும் எந்தான வீதியின் கொஸ்கேல்ல பகுதியில் உள்ள பாழடைந்த இடத்துக்கு கடத்திச் சென்று அங்கு துப்பாக்கி சூடு மேற்கொண்டிருந்தனர்.

இதற்கமையவே மேற்கொண்ட மேலதிக விசாரணைகளின் அடிப்படையில் இந்த சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் துபாயில் தலைமறைவாகி திட்டமிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடையதாக அறியப்படும் "ஹோமாகம ஹந்தயா" என அழைக்கப்படும் தனுஜ சம்பத் என்பவர்களுடன் நெருங்கிய தொடர்புகளை பேணியவர்கள் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட ஜீப் வண்டி, கார் ,3 மோட்டார் சைக்கிள்கள், பதிவு செய்யப்பட்ட இரு இலக்க தகடுகள், 197 கிராம் ஹெரோயின் போதைப்பொருள், 96 கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பவனமும் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 27 முதல் 29 வயதுடையவர்கள் எனவும் அவர்கள் ஹோமாகம மற்றும் பாதுக்கை பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

மேலும் இந்த கொலைச்சம்பவத்துடன நேரடி தொடர்புடைய மற்றைய சந்தேகநபர்கள் அடையாளம்காணப்பட்டுள்ளதுடன் அவர்களை கைது செய்ய மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

விடயம் தொடர்பில் மேல்மாகாண வடக்கு குற்றத்தடுப்பு பிரிவு மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

## ஆளும்தரப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த கால ஆளும்தரப்புகளின் அனைத்து செயற்பாடுகளையும் முறையற்றது என்ற நிலைப்பாட்டில் இருந்துக் கொண்டு செயற்படுகிறது. நாட்டு மக்களின் அபிவிருத்திக்காக முன்னெடுக்கும் சகல திட்டங்களுக்கும் எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

நாட்டு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு இந்த ஆளும்தரப்பு எவ்வித நடவடிக்கைகளையும் இதுவரையில் எடுக்கவில்லை. கடன் பெறுவதைமாத்திரமே பிரதானகொள்கையாகக் கொண்டு செயற்படுகிறது.

## பிரகீத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தரணி உப்புல் குமரப்பெரும, இந்த வழக்கின் பிரதான புலனாய்வு அதிகாரி மற்றும் விசாரணையை மேற்பார்வையிட்ட ஷானி அபேசேகர ஆகியோர் சாட்சியாகப் பெயரிடப்படவில்லை என்று நீதிமன்றத்தில் குறிப்பிட்டார்.

அதன்படி, ஷானி அபேசேகரவை சாட்சியாளராகப் பெயரிட 2022 நவம்பர் 29ஆம் திகதியன்று நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்ததாகவும், ஆளும்தரப்பில் ஆஜரான அப்போதைய பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், அது பரிசீலிக்கப்படும் என்று தனக்குத் தெரிவித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இருப்பினும், இன்றுவரையில் ஷானி அபேசேகர சம்பந்தப்பட்ட வழக்கில் சாட்சியாகப் பெயரிடப்படவில்லை என்றும் சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

இந்தவழக்கில் ஷானி அபேசேகர ஏற்கனவே 109ஆவது சாட்சியாக பெயரிடப்பட்டுள்ளார் என்று அரச தரப்பின் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் வசந்த பெரேரா நீதிமன்றத்திற்குத் தெரிவித்தார்.

பின்னர், வழக்கின் மேலதிக விசாரணைகள் ஜூலை 18 வரை ஒத்திவைக்கப்பட்டன.

கிரிதல இராணுவ முகாமின் முன்னாள் கட்டளை அதிகாரி ஷம்மி அர்ஜுன குமாரட்ன உட்பட இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒன்பது பேர் சம்பந்தப்பட்ட வழக்கில் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

2010 ஜனவரி 25 அல்லது அதற்கு அண்மித்த நாள் ஒன்றில் பிரதிவாதிகள் கிரிதல, ஹபரணை மற்றும் கொட்டாவ ஆகிய பகுதிகளில் அடையாளம் தெரியாத ஒரு குழுவினருடன் சேர்ந்து இரகசியமாகச் சிறையில் அடைக்கும் நோக்கத்துடன், பத்திரிகையாளர் பிரகீத் எக்னலிகொடவைக் கடத்தினர் என்றும் பின்னர் கொலை செய்தனர் என்றும் குற்றவியல் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபர் பிரதிவாதிகளுக்கு எதிராக குற்றச்சாட்டுகளை தாக்கல் செய்திருக்கிறார்

## பிரதேச சபை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலக்கு வைத்து மோட்டார் சைக்கிள் ஒன்றில் வருகை தந்த அடையாளம் தெரியாத இருவர் இந்தத் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உதயகுமார வுட்லர் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளுக்காக 3 பொலிஸ் குழுக்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தேசிய மக்கள் சக்தியின் வெலிகம பிரதேச சபையின் உறுப்பினர் சட்டத்தரணி தாரக நாணயக்காரவின் வெலிகம தெலிஜ்ஜவில பகுதியில் அமைந்துள்ள வீட்டை இலக்கு வைத்து நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இந்த துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் வருகை தந்த அடையாளம் தெரியாத இருவரால் ரி-56 ரக துப்பாக்கியை பயன்படுத்தி இந்தத் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும் துப்பாக்கிதாரிகளால் துப்பாக்கி சூடு நடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களால் பதில் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனையடுத்து துப்பாக்கிதாரிகள் அங்கிருந்து மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர்.

மேலும் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் குறித்த பகுதியில் மின்கட்டமைப்பும் துண்டிக்கப்பட்டிருந்துள்ளது. எவ்வாறாயினும் துப்பாக்கிச் -சூட்டின்போது எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தியின் வெலிகம பிரதேச சபை உறுப்பினர் லசந்த விக்கிரமசேகரவினால் தனக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகத் தெரிவித்து தேசிய மக்கள் சக்தியின் பிரதேச சபை உறுப்பினர் தாரக்க நாணயக்காரவினால் முறைப்பாடு ஒன்றும் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளது.

லசந்த விக்கிரமசேகரவினால் தாரக்க நாணயக்காரவுக்கு கடந்த மே 23 மற்றும் ஜூன் 23 ஆகிய நாட்களில் வாட்ஸ்அப் மூலம் இந்தக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் இந்த விடயம் தொடர்பிலான வழக்கு விசாரணைகளும் தற்போது இடம் பெற்று கொண்டிருக்கின்றன. இதையடுத்து பிரதேச சபை உறுப்பினருக்கு இரு பொலிஸாரின் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

தேசிய மக்கள் சக்தியின் பிரதேச சபை உறுப்பினர் தாரக்க நாணயக்கார துப்பாக்கிச் சூடு குறித்துக் கருத்து தெரிவிக்கையில்

"நான் உறங்கிக் கொண்டிருந்தேன். சத்தம் கேட்டது. பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு அழைப்பினை மேற்கொண்டேன். பெரும்சத்தம் கேட்டதாகவும் பதில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாகவும் குறிப்பிட்டார். பின்னர் அவர்கள் சென்றாகவும் என்னை பதுங்கிருக்குமாறும் கூறினர்" என்றார்.

இந்த துப்பாக்கிச்சூடு யாரால் மேற்கொண்டது என்பது தொடர்பில் இதுவரை உறுதியான தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

## நீதிமன்றக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிணையில் விடுவிக்க கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி அனுமதித வழங்கியுள்ளார்.

இதற்கமைய சந்தேகநபரை 50 ஆயிரம் ரூபா ரொக்கப்பிணையிலும் 25 இலட்சம் ரூபா சரீரப்பிணைகளிலும் விடுவிக்க உத்தரவு பிறப்பித்த நீதிவான், சாட்சியாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கக்கூடாது என்றும் எச்சரித்தார்.

சம்பவம் தொடர்பில் 5 மாதங்களுக்கு மேல் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் சந்தேகநபரை பிணையில் விடுவிக்குமாறு அவரது சார்பில் சட்டத்தரணி மார்வின் டி சில்வாவினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டதன் பின்னர் இதற்கான உத்தரவை கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்தது.

இதற்கமைய கொழும்பு மேல் நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட பிணை நிபந்தனைகள் சந்தேகநபருக்கு வாசித்துக் காட்டியதன் பின்னர் அவரை பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி உத்தரவு பிறப்பித்தார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# ஆடி மாதம் ஆன்மீக மாதம்

நம்பிக்கையின் அடிப்படையில்த்தான் நாம் நாளும் பொழுதும்யாவற்றையும் செய்து வருகின்றோம். சம யத்தில் நம்பிக்கை. தத்துவத்தில் நம்பிக்கை. புராண , இதிகாசகங்களில் நம்பிக்கை. முன்னோர் மொழி ந்த மொழிகளில் நம்பிக்கை. கற்றறிந்தவர் எழுதும் நூல்களில் நம்பிக்கை. அவர்கள் ஆற்றுகின்ற உரைகளில் நம்பிக்கை . இவற்றை எல்லாம் விட சமுகத்தில் நிலவுகின்ற நம்பிக்கை. இப்படியாக நமது வாழ்வில் நம்பி க்கை எனும் பொழுது பல பரிணாமங்களில் அமைந்திருப்பதைப் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. இதன் அடிப்படையில் பனிரெண்டு மாதங்கள் பற்றிய நம்பிக்கை எப்படி இருக்கிறது என்பதை நோக்குவதும் மிகவும் முக்கியமானதாயிருக்கிறது.

பனிரெண்டு மாதங்களும் வருகின்றன. போகின்றன. சில மாதங்களை சிறப்பென்றும் , சிலவற்றை ஒதுக்கிப் பார்ப்பதும் இயல்பாகி விட்டது. ஆனால் அப்படி ஒதுக்க வேண்டியது - மனத்தில் எழுகின்ற ஒரு வித மயக்கம் என்றே எண்ண வேண்டி இருக்கிறது. எல்லா மாதங்களும் ஏதோ ஒரு விதத்தில் சிறப்புக் களைத் தன்னகத்தே கொண்டு தான் வருகின்றன.மார்கழியைப் பீடை பிடித்த மாதம் என்கிறோம். புரட்டா சியையும் ஒரு பக்கம் தள்ளியே வைக்கிறோம் .ஆடியை மங்கலம் அற்ற மாதம் என்கிறோம். பங்கு னியை, சித்திரையை, தையை, ஆவணி யைக் கொண்டாடி வரவேற்கிறோம்.இப்படி நோக்குவது எங்களிடம் இயல்பாகி விட்ட நிலையில் ; மங்கலம் இல்லா மாதமாக எடுத்துக் கொள்ளும் ஆடி எங்களை நாடி வரு கிறது ! வருகின்ற ஆடியை விட்டு விட்டு விலகத்தான் எங்களால் முடியுமா ? முடியவே முடியாது ! நாடி வரும் ஆடி பற்றி பார்ப்போமா வாருங்கள் !

ஆடி என்றவுடன் – ஆடிச்செவ்வாய், ஆடி வெள்ளி, ஆடிப்பூரம், ஆடிக்கார்த்திகை, ஆடித்தபசு, ஆடிப் பெரு க்கு, ஆடி அமாவாசை, ஆடி பௌர்ணமி , என்று இறை வழிபாட்டுடன் இணைந்ததாக ஆடி மாதம் முழுவ தும் அமைந்திருப்பதை நாமனைவரும் மனமிருத்த வேண்டியது அவசியம். ஆடி மாதத்தை அம்மனின் மாதம் என்பதையும் அகமிருத்தல் மிகவும் அவசியமேயாகும்.அப்படி இருக்க ஆடியை நாடாமல் ஒதுக்கிப் பார்ப்பது முறையா ?

மார்கழியில் திருவெம்பாவை வருகிறது. திருப்பாவையும் , மணிவாசகரின் திருவெம்பாவையும் மார்கழி யில் கோவில்களில் பக்தி சிரத்தையுடன் பாடப்படுகிறது. வைணவர்களும் , சைவர்களும் கொண்டாடும் மாதமாய் மார்கழி இருக்கிறது. மாதங்களில் நான் மார்கழி என்று கீதையில் கண்ணனே சொல்லுவதை யும் கருத்திருத்த வேண்டும். புரட்டாசியில் நவராத்திரி வருகிறது. கலைகளைப் போற்றும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது.சமயமும் கலைகளும் சங்கமிக்கும் மாதமாய் புரட்டாசி விளங்குகிறது. ஆடி, புரட் டாசி, மார்கழி இறைவழிபாட்டுக்குரிய மாதங்களாகும். அப்படி என்றால் மற்றைய மாதங்கள் இறை வழி பாட்டுக்கு ஏற்றன அல்லவா என்று வினா எழுகிறதல்லவா ? ஆடி, புரட்டாசி , மார்கழி மாதங்களில் மங்க லமான நிகழ் வுகளான - வீடு குடுபுகுதல், திருமணம், திருமண நிச்சயார்த்தம், காது குத்தல், எதையும் செய் வதில்லை. காரணம் – இம்மாதங்கள் தேவர்களுக்கு உரிய மாதங்கள்.மனிதர்களுக்கும் அவர்களின் இன்ப ங்களுக்கும் உரிய மாதங்கள் அல்ல என்பதுதான் காரணம்.

சூரியனை அடிப்படையாகக் கொண்ட மாதங்கள்தான் நம்முடைய தமிழ் மாதங்கள்.கடக ராசியில் சூரி யன் சஞ்சரிக்கும் காலம்தான் ஆடி மாதம்.ஆடி மாதம் தொடங்கி மார்கழி மாதம் வரையான ஆறு மாத ங்களும் சூரியன் - தன்னுடைய வடக்கு நோக்கிய பயணத்தை முடித்துக் கொண்டு தெற்கு நோக்கி பய ணிக்கிறார்.தெற்கு என்பது பித்ருக்களுக்கு உரிய திசையாகும். இதனால் இம்மாதத்தை பித்ருக்குகளுக்கு வழி பாடாற்றும் மாதமாயும் கொள்ளும் நிலை ஏற்பட்டது.

மனிதர்களுக்கு ஓராண்டு என்பது தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும்.ஆடி தொடங்கி மார்கழி வரையான ஆறுமாதங்களும் சூரியனின் தெற்கு நோக்கிய பயணமாகும். தை தொடக்கம் ஆடிவரையான ஆறு மாத ங்களும் சூரியனின் வடக்கு நோக்கிய பயணமாகும்.வடக்கு நோக்கிய பயணக் காலத்தில் வெப்பம் அதிக மாய் இருக்கும்.தெற்கு நோக்கி சூரியன் பயணிக்கும் பொழுது வெம்பம் தணிந்து – காற்று, மழை, பனி என் னும் காலநிலை வந்து நிற்கும். தெற்கு நோக்கிய சூரியனின் பயணக்காலம் தேவர்களுக்கு இராக்கால மாகும். அதாவது ஆடி என்பது தேவர்களின் இராக்கால தொடக்கமாகும். மார்கழி என்பது தேவர்களுக்கு விடியல் காலமாகக் கருதப்படுகிறது. ஆடி இரவின் தொடக்கம். மார்கழி விடியலின் தொடக்கம்.

ஆடியில் சூரியன் கடகராசியில் சஞ்சரிக்கிறார் என்று பார்த்தோம்.கடகராசி என்பது சந்திரனின் ஆட்சி வீடாகும்.சூரியன் சிவனின் அம்சமாகும். அந்தச் சூரியன் சக்தியின் அம்சமான சந்திரனில் சஞ்சாரம் செய் யும் நிலை இக்காலத்தில் அமைகிறது. இதனால் சந்திரனின் ஆளுமை அதிகரிக்கிறது.இப்படி ஆவதால் ஆடி மாதம் என்பது சக்தியின் மாதமாய் விளங்குகின்றது. அக்காரணத்தால்தான் அம்மனின் மாதம் – ஆடி என்று ஆகிவிட்டது. அம்மனு க்கு உகந்த விழாக்கள் இம்மாதத்தில் முக்கியத்துவம் பெறுவது இதனால்த் தானோ என்று எண்ணிட வைக்கிறது.

அறிவியல் வழியில் சிந்திப்பதும் உகந்ததாகும். ஆடி மாதம் காற்றுக் கால மாகும். காற்றினால் பரவும் நோய்கள் அதிகரிக்கும் காலமாகவும் இக்காலம் அமைகிறது. இதனால், வேப்பிலை, மஞ்சள் என்பவற்றை வழிபாடு என்ற வகையில் அம்மனுக்கு உரியதாக்கி நிற்பதும் நோக்கத்தக்கது. அத்துடன் கூழ் காய்ச்சுவ தும் , அம்மனுக்கு வைத்து வழிபடுவது கூட அறிவியலை ஆன்மீகத் துடன் இணைக்கும் நிலையினையே காட்டுகிறது அல்லவா !



ஆடி மாதத்தை கணக்கிட்டுத்தான் பண்டிகைகளின் தொடக்கமே அமை கிறது என்பதும் நோக்கத்தக்கது. கிராமங்கள் தோறும் அம்மனுக்குரிய விழாக்கள் நடைபெறுவதும் மனமிருத்த வேண்டியதே.அம்மனைப் பல நிலைகளில் வழிபடுவதும் நோக்கத்தக்கது. காவல் தெய்வமாய் கருதி போற்றி வழிபாடுகளில் ஈடுபடு வதையும் ஆடியில் காணக்கூடியதாய் இருக்கிறது.

ஆடியில் ஆறுகளில் நீர்ப்பெருக்கு வருவதை அனைவரும் கொண்டாடி மகிழ்கின்றார்கள். இதனையே ஆடிப்பெருக்கு என்று அகமகிழ அழைக் கின்றார்கள்.சுமங்கலிப் பெண்கள் தங்களின் தாலிக்கையிற்றை மாற்று வதும், அம்மனுக்கு படையில் வைத்து ஆராதிப்பதும் இவ்வேளை இடம் பெறுகிறது என்பதும் மன ங்கொள்ளத் தக்கதாகும்.

பெண்கள் விரும்பி அனுட்டிக்கும் விரதமான வரலட்சுமி விரதம் ஆவணி மாதத்துக்குரியதாய் இருந்தா லும் , பெரும்பாலன சமயங்களில் ஆடி மாதத்தில் வரும் வெள்ளிக்கிழமைகளில் வருகிறது. ஆடி வெள் ளியில் மாரியம்மனுக்கு தேர்திருவிழா, தெப்பத்திருவிழா , தீமிதிப்பு எல்லாம் நடக்கும். அருள் மாரியாய் கருமாரு விளங்கிறாள் அல்லவா ? சின்னக் கோவில்கள், பெரிய கோவில்கள் எல்லாம் இந்த விழாக்கள் நடை பெறு வதும் நோக்கத்தக்கது.

ஆடி மாதத்தில் வருகின்ற அமாவாசையும் தையில் வருகின்ற அமாவாசையும் கடலில் நீராட உகந்த தினங்களாகும்.தஷிணாயன புண்ணிய காலம் , உத்தராயண புண்ணிய காலம் என்று இக்காலங்களைச் சிறப்பித்துச் சொல்லுவார்கள்.

இறைவனை அடைவதற்கு அன்னை பராசக்தி தவம் செய்ததும் ஆடி மாதத்தில்த்தான்.சூடிக்கொடுத்த சுடர்கொடியான ஆண்டாள் நாச்சியார் ஆடியில்த்தான் அவதரிக்கின்றார்.சுந்தரமூர்த்தி நாயனாரை இறை வன் அழைத்துக் கொண்டதும் ஆடியில்த்தான் என்பதும் அகமிருத்த வேண் டிய கருத்தெனலாம்.

தையினை பொங்கல் திருநாளாய், அறுவடைத் திருநாளாய் கொண் டாடுவதற்கு வித்திடப்படுவதே ஆடியி ல்த்தான். ' ஆடிப்பட்டம் தேடி விதை ' என்னும் பழமொழியே ஆடியில் விதைத்தால்த்தான் தையில் அறுவடை செய்ய முடியும் என்பதைக் காட்டி நிற்கிறதல்லவா?

ஆடிச்செவ்வாயினை மையமாய் கொண்டு ' ஆடிச்செவ்வாய் தேடிக்குளி – அரைச்ச மஞ்சளைப் பூசிக்குளி ' என்னும் முதுமொழி பழக்கத்தில் இருக்கிறது.

ஆடி தெய்வீக மாதம். அம்மனின் மாதம், என்றெல்லாம் போற்றப் பட்டாலும் புதுமணத் தம்பதிகளுக்கு மட் டும் வெறுப்பான மாதமாய் இருக்கிறது. அவர்களுக்கு மட்டும் ஏன் வெறுப்பாய் இருக்கிறது என்பதையும் அறிவதும் அவசியம் அல்லவா ! மணமான தம்பதிகளைப் பிரித்து விடுவார்கள்.அதாவது பெண்ணைப் பிறந்த வீட்டு அனுப்பி விடு வார்களாம். சாஸ்த்திரம் என்று சொன்னாலும் – இங்கே எங்களின் முன்னோ ர்களின் நல்ல சிந்தனையும் கலந்தே இருக்கிறது. ஆடியில் கருவுற்றால் – பத்தாவது மாதமான சித்தியி ரையில் பிரசவம் நடக்கும். சித்தியிரையில் புத்திரன் பிறந்தால் தந்தைக்கு நல்லதல்ல என்னும் கருத்து சாதரணமாக சமூகத்தில் நிலவுகிறது. இது எந்தளவுக்கு உண்மை என்பது தெரியவில்லை. சித்திரையில் கத்தரி வெயில் என்பதை அனைவரும் அறிவோம் .வெப்பம் கூடிய காலத்தில் பிரசவம் நடந்தால் கால நிலை காரணமாக பிரசவிக்கும் பெண் பெரும் வேதனைக்கு ஆளாவாள். பிரசவ வேதனையுடன் வெயி லின் கொடுமையும் பெருவேதனையைந் தந்துவிடும் என்பதால் மணப்பெண்ணை பிறந்த வீட்டுக்கு ஆடியில் அனுப்பிய எங்களின் முன்னோர்களின் சிந்தனையினைப் பாராட்டாமல் இருக்கத்தான் முடியுமா?

ஆடி என்றவுடன் எங்கள் தங்கத்தாத்தா சோமசுந்தரப் புலவர் கட்டாயம் வந்து நிற்பார்.தாத்தாவின் வர வையும் , அவரின் ஆடிப்பிறப்பு ஆனந்தமான பாடலையும் நினைவுக்குக் கொண்டுவருவதும் நாடிவரும் ஆடி அல்லவா !

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தம் தோழர்களே!
கூடிப்பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

பாசிப்பயறு வறுத்துக்குத்திச் செந்நெல்
பச்சை அரிசி இடித்துத் தெள்ளி,
வாசப்பருப்பை அவித்துக்கொண்டு நல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து,

வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே
வேலூரில் சக்கரையுங்கலந்து,
தோண்டியில் நீர்விட்டு மாவை அதிற்கொட்டி
சுற்றிக் குழைத்துத் திரட்டிக்கொண்டு.

வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித்தட்டி
வெல்லக் கலவையை உள்ளே இட்டு
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பாளே
பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே!

பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி
போட்டு மாவுண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவள்
மணக்க மணக்க வாயூறிடுமே

குங்குமப் பொட்டிட்டு பூமாலை சூடியே
குத்து விளக்குக் கொளுத்தி வைத்து
அங்கிளநீர் பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப் படைப்பும் படைப்போமே

வண்ணப் பலாவிலை ஓடிப்பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக்கொண்டு
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளி வார்க்க
ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே

வாழைப் பழத்தை உரித்துத் தின்போம் நல்ல
மாவின் மாவின் பழத்தை அறுத்துத் தின்போம்
கூழைச் சுடச் சுட ஊதிக்குடித்துக்
கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே

நாடிவரும் ஆடி அமங்கல மான மாதம் அல்ல ! அது



தெய்வீக மாதம் ! கொழுக்கட்டையும் சாப்பிட்டு கூழும் குடித்து மகிழும் காலம். ஆடிப்பட்டம் விட்டு அம்மனை போற்றிக் கொண்டாடி , தோழர்களுடன் பாடி மகிழும் காலமாகும்.

மெஞ்ஞானமும் , விஞ்ஞானமும் இணைந்து மேதினியில் சிறந்து விளங்குவதுதான் ஆடி மாதத்தின் சிறப்பு எனலாம். எங்கள் முன்னோர்கள் எதையும் தக்க காரண காரியத்தோடுதான் வகுத்தார்கள். அவர் களின் கணிப்பில் தவறுகளைக் கண்டு பிடிப்பது முறையானதல்ல. தற்காலத்தில் எதற்கெடுத்தாலும்

விதண்டா வாதம் பேசுவது என்பது பெரும் மேதாவித்தனம் ஆகியே விட்டது. ஒவ்வொரு மாதத்துக்கும் ஒவ்வொரு சிறப்பு இருக்கிறது. சிறப்புக்களைச் சீர்தூக்கிப் பார்ப்பதுதான் மிகவும் உகந்த பண்பாடாகும்.

நம்பிக்கைகள்தான் வாழ்வின் ஆணிவேராகும். எமது முன்னோர் கொண்ட நம்பிக்கைகள் , அதற்காக அவர்கள் வகுத்த அற வழிகள் , ஆன்மீக வழிகள் , அத்தனையும் எம்மை என்றுமே வழிநடத்திச் செல் வதற்கு அருந்துணையாக அமைகின்றது என்பதை அகமிருத்துவது அவசியம் அல்லவா !



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்**
**மெல்பேண்- ஆஸ்திரேலியா**







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.07.2025இல் வெளியிடப்பெற்றது